# சங்க காலம் முதல் சமகாலம் வரையிலான கழங்கு (தட்டாங்கல்) விளையாட்டுகள்

47

**வே.சங்கீதா**

**நாட்டுப்புறவியல் மற்றும் பண்பாட்டு ஆய்வுகள் துறை**

**நிகழ்த்துகலைப்புலம், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை**

**முன்னுரை:**

மனித இனத்தில் விளையாட்டுக்கள் எப்பொழுதும் முக்கியத்துவம் வகித்துவருகின்றன. அவற்றைப் பற்றிய குறிப்புகள் தமிழ் இலக்கியங்களில் அநேக இடங்களில் காணப்படுகின்றன. சங்ககால மக்கள் பெரும்பாலும் விளையாட்டை வெறும் பொழுதுபோக்குக்காக மட்டுமல்லாமல் அவர்களது வீரத்தை பறைசாற்றும் வகையிலும் விளையாடி வந்துள்ளனர் என்பதை இப்பகுதியில் காணலாம். நாட்டுப்புற விளையாட்டுகளை வகைப்படுத்துகையில் அகவிளையாட்டுகள், புறவிளையாட்டுகள் என்று இருவகைகளாகப் பிரித்துள்ளனர். அகவிளையாட்டு என்பது பெரும்பாலும் பெண்களுக்கு உரிய விளையாட்டாகும் அவைகள், தட்டாங்கல், பல்லாங்குழி, ஊஞ்சல் ஆடுதல், மஞ்சள் நீர் விளையாட்டு ஆகும். புறவிளையாட்டு என்பது ஆண்கள் விளையாடக் கூடிய விளையாட்டுகள் அவை இளவட்டகல் தூக்குதல், உரி அடித்தல், வழுக்கு மரம் ஏறுதல், மஞ்சு விரட்டு, என்றும் தாம் விளையாடும் விளையாட்டுகளைப் பிரித்துள்ளனர். நாட்டுப்புற விளையாட்டுக்களை பாலின அடிப்படையில் பிரித்து மக்கள் அன்றிலிருந்து இன்று வரையிலும் விளையாடி வருகின்றனர்.

நாட்டுப்புற வாழ்வியற் கூறுகளில் பெண்களின் விளையாட்டுகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. உலக வழக்கங்களையும், குடும்ப உறவு முறைகளையும் பொருளாதார ரீதியான சிக்கல்களையும் எதிர்கொள்ளும் விதமாக கழங்கு விளையாட்டு பழங்கால மகளிரின் சிறப்பு மிக்க விளையாட்டாக திகழ்ந்துள்ளது. கழங்காடுதலின் இன்றையகால பெயர்கள் தட்டாங்கல், சொட்டாங்கல் ஆகும். கழங்கு விளையாட்டு பழங்காலத்தில் இருந்து இன்றைய காலம் வரையிலும் பெண்களுக்கே உரிய விளையாட்டாக திகழ்ந்துவருகிறது. இத்தகைய தட்டாங்கல் விளையாட்டு பற்றி ஆய்வு செய்து விளக்குவதே நோக்கமாகும்.

**சங்க காலத்தின் கழங்கு விளையாட்டு :**

சங்க கால மகளிரின் விளையாட்டுக்களில் முக்கியமான விளையாட்டாக பல விளையாட்டுகள் இருந்தாலும் புறநானூற்றில் கழங்கு விளையாட்டு பற்றிய செய்திகள் சொல்லப்படுகின்றன. கழங்காடுதல் பற்றி கூறுகின்ற போது அவ்விளையாட்டு அக்கால பருவ மகளிர் மிகவும் விரும்பி விளையாடிய விளையாட்டுக்கள் என்பதை சங்க இலக்கிய சான்றுகள் மூலம் தெரிந்து கொள்ள முடிகின்றது.

”குறுந்தொடி மகளிர்
பொலஞ்செயல் கழங்கின் தொற்றி ஆடும். (புறம் 36 :3 – 4)

என்னும் பாடல் புறநானூற்றில் மகளிர் கழங்கு விளையாட்டு பாடலாக அமைந்துள்ளன. கழங்கு விளையாட்டின் தோற்றம் பற்றிக் கூறும் போது இலக்கியத்தில் சுட்டிக்காட்டப்படுகிறது. "கழங்காடுதல்" என்ற விளையாட்டு இன்றைய தட்டாங்கல்லை குறிக்கும் அம்மானை என்பது கழச்சிக்கல் மற்றும் சொட்டாங்கல் என்றும் அழைக்கப்படுகிறது. அவைதான் நாளடைவில் தட்டாங்கல்லாக மாறி இருக்கலாம். மேலும் இளம் பெண்கள் கழங்கு விளையாட்டில், ஒன்று முதல் ஏழு வரையில் எண்ணிக்கை வரும்படியான பாடல்களை பாடுவதாகவும் புலவர்கள் உலா என்னும் பிரபந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கழங்கு சார்ந்த சங்க இலக்கிய பாடல்கள்** :

கழங்கு விளையாட்டினை அக்கால பெண்கள் தங்களின் எண்ணங்களையும், ஆற்றாமையையும் அவர்களது இளமைக்காலத்தில் தன் தோழிகளுடன் விளையாடிய நினைவுகள் பற்றி அகநானூற்று பாடலிலும் அதை போன்று பெரும்பாணாற்றுப்படையும் விரிவாக மகளிரின் விளையாட்டான கழங்காடுதல் பற்றிக் செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளது.

"இளந்துணை ஆயமோடு கழங்கு உடன் ஆடினும்" (அகம் 17)
"கழங்கு ஆடு ஆயத்து அன்று நம் அருளிய '' (அகம் 66)
முத்தவார் மணல் பொறகழங்கு ஆடும்" (பெரும் -334)

என்னும் இப்பாடல் வரிகள் முதல் வரியில் தன் இளம்தோழியுடன் சேர்ந்து விளையாடும் நிகழ்வினை விளக்குகிறது. அக்கால மகளிர் தங்களின் கல்வி அறிவை கழங்கு விளையாட்டின் மூலம் அறிந்துள்ளனர் என்பதை இப்பாடல் குறிப்பிடுகிறது. அக்காலத்தில் பெண்கள் மணலில் அமர்ந்தபடி கழங்கு ஆடியதாகவும், பெண்கள் பென்னாலான கற்கல், வண்டல் கற்களை பயன்படுத்தி விளையாடியதாகவும் குறிப்பிடப்படுகிறது. அக்கால பெண்களிடத்தில் கழங்கு விளையாட்டு முக்கிய பங்கு பெற்றுள்ளது என சங்க இலக்கியப் பாடல்கள் தெளிவுபடுத்துகின்றன.

**இன்றைய கால தட்டாங்கல் விளையாட்டு :**

இன்றைய காலத்தில் கழங்கு என்னும் பெயருக்கு மாற்றாக சொட்டாங்கல், தட்டாங்கல், அச்சுகல் என்று பெயர்கள் மட்டும்மின்றி, விளையாட்டும் முறையும் மாற்றம் பெற்றுள்ளது என்பதை இவ்வாய்வில் விளக்கப்படவுள்ளது.

**தட்டாங்கல் விளையாட்டின் வகைகள்:**

மூன்று கல், ஐந்து கல், ஏழு கல், பத்து கல், முப்பத்தி ஒரு கல், அறுபது கல் என்ற வரைமுறையில் இன்று வரையிலும் கிராமப்புறங்களில் கழங்கு என்னும் தட்டாங்கல் விளையாட்டு விளையாடப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆட்டத்திற்க்கும் தனி விதிமுறைகளைச் கொண்டு தட்டாங்கல் விளையாடப்படுகிறது என்று பானுமதி (வயது, 58) என்ற தகவலாளர் கூறுகிறார்.

**தட்டாங்கல் விளையாட்டின் அமைப்பும், ஆட்ட முறையும்:**

அக்காலத்தில் இருந்து இக்காலம் வரையிலும் பெண்கள் தட்டாங்கல் விளையாட்டினை வீட்டின் திண்ணைகளிலும், வாசல் முற்றத்திலும் விளையாடி மகிழ்ந்துள்ளனர். அதே போன்று இன்றும்

கிராமப்புறங்களில் விளையாடி வருகின்றனர். தட்டாங்கல் ஆட்டத்திற்கு இத்தனை நபர்கள் தான் விளையாட வேண்டும் என்ற விதிமுறை கிடையாது. இரண்டு மற்றும் ஐந்து என குழுவாகவும் விளையாடி வருகின்றனர். முதல் மூன்று கல் ஆட்டம் இந்த ஆட்டத்தில் இரு பெண்கள் எதிர் எதிர் அமர்ந்து, மூன்று கற்களையும் தரையில் பரப்பி ஒரு கல்லை மேல்நோக்கி எறிந்து கீழ் உள்ள இரு கற்களை வாரிபிடிப்பதே மூன்றுகள் விளையாட்டாகும், மூன்றுகள் விளையாட்டினை ஐந்து முறை விளையாட வேண்டும்.மூன்று கல் விளையாட்டின் ஐந்தாவது முறை இவ்வாறு விளையாடப்படுகிறது. தன் கைகளில் உள்ள கற்கள் தரையில் விழாதவாறு, தன் எதிரில் இருக்கும் நபரிடம் விளையாடி வெற்றி பெற்று மூன்று கற்களையும் சேகரித்து அதன் மூலம் கிடைத்த கற்களை பயன்படுத்தி அடுத்த ஆட்டமான ஐந்து கல் விளையாட்டு விளையாடப்படுகிறது. ஐந்து கல் விளையாட்டு விளையாடும் முறை நான்கு கற்களை தரையில் பரப்பி , ஒரு கல்ளை மேல்நோக்கி எறிந்து கீழ் உள்ள நான்கு கற்களை தரையில் தட்டி வாரி பிடித்து விளையாடப்படுகிறது. இவ்வாறு குழுவாக சேர்ந்து விளையாடுவது வழக்கம் என தகவலாளர் ஜோதி (வயது, 54) விளையாட்டு முறையை விளக்கினார்.

**தட்டாங்கல் விளையாட்டின் வட்டாரம் சார்ந்த பாடல்கள்:**

இன்றைய காலத்தில் தட்டாங்கல் விளையாட்டு ஒரு இருபது வருடத்திற்க்கு முன்பு பாடப்பெற்ற பாடல்கள் சற்று மாற்றம் அடைந்துள்ளன. அவற்றின் ஐந்து கல், ஏழுகல், பத்து கல் போன்ற ஆட்டத்திற்கு வட்டாரங்கள் சார்ந்தும் விளையாட்டு வேறுபட்டுள்ளது. அதே போன்று வேறு விதமான பாடல்களும் பாடப்படுகின்றன. தமிழ்நாட்டில் தட்டாங்கல் விளையாட்டிற்க்கு வட்டாரங்கள் சார்ந்து பாடல்கள் பாடப்படுகின்றன. அவற்றில் தென் மாவட்டங்களான ,விருதுநகர் ,தென்காசி, மதுரை, தேனி, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் விளையாட்டு முறைகள் விளையாட்டின் போது பாடப்படும் பாடல்கள் ஆகியவை கள ஆய்வின் மூலம் சேகரிக்கப்பட்டது. அவை பின்வருமாறு.

**தட்டாங்கல் விளையாட்டிற்கு விருதுநகர் வட்டாரம் சார்ந்த பாடல்:**

”தப்பு ஒன்று
தாளம் இரண்டு
குச்சில் மூன்று
குலவை நான்கு
தீர்த்தம் ஐந்து
திருவாள் ஆறு
மாமன் ஏழு
மாமன் மகன் எட்டு கட்டு கட்டு மாமன் மகனை கட்டு”

இப்பாடலின் முதல் வரியின் விளக்கம் தப்பு என்பது பாரம்பரிய இசைகருவியாகும், தாளம் என்பது மத்தளத்தை குறிக்கும் சொல், குச்சில் என்பது பூப்படைந்த பெண்ணிற்கு தன் தாய் மாமன் கட்டிதரும் ஓலை குச்சி வீட்டை குறிக்கிறது. குலவை சுபநிகழ்வுகளான திருமணம், காதணி விழா, திருவிழா, பொங்கல் போன்ற மங்கல நிகழ்ச்சிகளின் போது பெண்கள் வாயைத் திறந்து நாக்கை

வாயின் பக்கவாட்டிலோ மேலும் கீழுமாகவோ அசைத்து எழுப்பும் ஒரு விதமான ஓசை ஒலியாகும். ஐந்து மூலிகை சார்ந்த தண்ணீர், மன்னர்கள் பயன்படுத்திய வால், அதன் பின் பெண்ணின் தாய் மாமன் மகன்களை திருமணம் செய்யும் முறையின் வெளிப்பாடக இப்பாடல் விளக்கத்தினை தெய்வானை (வயது ,60) என்ற தவலாளர் கூறினார்.

**தென்காசி வட்டாரம் சார்ந்த பாடல்கள்:**

"குண்டு குண்டு
கோலிக் குண்டு
குத்து விளக்கு
வச்சு தம்பா
வாரி எடுப்பா
இறக்கி கல்லை எந்தி
எந்திய கல்லை
தான் வாரி துடைக்கி கல்லே
கல்லே எந்த கல் செங்கல் கல்."

இப்பாடலில் முதல் வரி சிறுவர்கள் விளையாட்டிற்கு பயன்படுத்தப்படும் கோலிக் குண்டினை குறிப்பிடுகிறது, சுபநிகழ்வுகளில் பயன்படுத்தப்படும் குத்துவிளக்கு, சீர் எடுத்து செல்வதற்கு பயன்படுத்தப்படும் தாம்பூலம், கிணற்றில் நீர் இரைக்கும் முறை, வீடுகட்டுவதற்கு பயன்படுத்தப்படும் செங்கற்கல்லையும் இப்பாடலில் மூலம் விளக்கப்பட்டுள்ளது. தென்காசி வட்டாரத்தில் தட்டாங்கல் விளையாடிய பெண்கள் இன்று வரையிலும் இப்பாடலை பயன்படுத்தி விளையாடிவருவதாக தகவலாளர் அஜித்தா (வயது,32) கூறினார்.

**தேனி வட்டார பாடல்கள் :**

தேனி ,ஆண்டிபட்டி, கீழமாதரம்பட்டி , துரைச்சாமிபுரம் ஆகிய ஊர்களில் வேறுவிதமான பாடல்கள் பாடப்பட்டு வருகின்றன .

"ஒன்னையாம்
இரண்டையாம்
மூன்றயாம்
அல்லி பிதிக்கையாம்
கோழி அடைக்க பாதுகக்க
கோழி திறக்க
வாசல் தண்ணீர் தெளித்தல் சலப்பு சலப்பு
முட்டையை அடை கூட்டுதல்
மசால் அரைத்தல்
கொரண்டி பிடித்தல்
அப்புறம் சோறக்கி உண்ணுதல் "

இப்பாடல் முழுமையாக திருமணம் ஆன பெண்களுக்கும் ,பருவமடைந்த பெண்களுக்கும் வீட்டில் செய்யக்கூடிய அனைத்து விதமான வேலைகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் இப்பாடலில் சொல்லப்படுகிறது. முதலில் அதிகாலையில் எழுந்து வீட்டின் வாசல் தெளித்தல், கோலம் இடுதல், வீட்டில் வளர்க்கும் உயிரினங்களை பாதுகாத்தல் , பின்பு உணவுக்காக பயன்படுத்துதல், உணவுக்கு அம்மியில் மாசல் அரைத்தல், உணவு சமைத்து கூட்டமாக உருண்டை பிடித்து உண்ணுதல் என குடும்ப உணவுமுறைகளை விளையாட்டின் மூலம் கிராமபுறங்களில் மக்கள் கற்றுதருகின்றனர்,குடும்ப பொறுப்புகளை கற்றுத்தரும் விதமாகவும் இப்பாடல்கள் பாடப்பெற்றிருக்கலாம் என தகவலாளர் யோகராணி (வயது ,48) குறிப்பிட்டார்.

**இராமநாதபுரம் வட்டாரத்தில் கழங்கு விளையாட்டிற்கு பாடப்படும் பாடல்கள் :**

இதற்கு முன்பு பார்த்த பாடல்களை காட்டிலும் இப்பகுதி பாடல் கேலி பாடலாக தட்டாங்கல் விளையாட்டில் பாடப்பெற்றுள்ளது.

“ஒன்னு உன் வாயில மண்ணு
ரெண்டு தவளை இரண்டு
மூன்று முக்காலிக்கு கால் மூன்று
நான்கு நாய்க்குட்டி வாலு
ஐந்து அவரக்காய் பிஞ்சு
ஆறு ஆறுமுகத்த பாரு
ஏழு எட்டி நில்லு
எட்டு டமடம கொட்டு
ஒன்பது ஒழுங்கா உட்காறு
பத்து உன் வாய பொத்து

என்ற பாடல் முறைமாமனை பற்றி பெண்கள் கேலி செய்து விளையாடக்கூடிய பத்து கல் விளையாட்டு இப்பாடல் விளக்குகிறது இன்றும் இந்த வட்டாரம் சார்ந்த பெண்களிடத்தில் விளங்கி வருகிறது என இராமக்காள் (வயது , 54) என்ற தகவலாளர் கூறினார்.

**முடிவுரை:**

தட்டாங்கல் விளையாட்டின் பெண்கள் குடும்ப ஒற்றுமையை பாதுகாத்தல் தோழிகளுடன் குழு ஒற்றுமை,விட்டுக்கொடுத்து செல்லும் மனப்பான்மை,வெற்றி தோல்வியை ஏற்றுக் கொள்ளுதல், சகிப்புதன்மை, நட்புணர்வு, உற்சாகம், நண்பர்களை உருவாக்குதல் , உடலினை வலிமைப்படுத்துதல் போன்றவற்றை இயல்பாக உலகிற்கு வெளிப்படுத்தும் தட்டாங்கல் விளையாட்டினை இவ்வாய்வு கட்டுரையில் மூலம் காணலாம்.

**தகவலாளர் பட்டியல் :**

| வ. எண் | பெயர் | வயது | தொழில் |
|---|---|---|---|
| 1. | தெய்வானை | 60 | விவசாயம் |
| 2. | யோகராணி | 30 | ஆசிரியர் |

| | | | |
|---|---|---|---|
| 3. | ராமக்காள் | 52 | தையல் பணி, விவசாயம் |
| 4. | அஜித்தா | 32 | முனைவர் பட்ட ஆய்வாளர் |
| 5. | R. அனிதா | 25 | முனைவர் பட்ட ஆய்வாளர் |
| 6. | பானுமதி | 58 | ஆசிரியர் |
| 7. | ஜோதி | 42 | விவசாயம் |

**துணைநூல் பட்டியியல் :**

சரஸ்வதி வேணுகோபால் 2020 பழங்கால மகளிர் கழங்கு விளையாட்டு, (UGC journal list ) 2020.

2. பக்தவத்சல பாரதி 2014 இலக்கிய மானிடவியல்,அடையாளம் பிரஸ், திருச்சி மாவட்டம் புத்தாநத்தம்

3. ஆ.பாப்பா 2020 விளையாடிய தமிழ் சமூகம், தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்ட அமைப்பு, சென்னை-01

4.வீரராகவன் 2017 இந்திய பாரம்பரிய விளையாட்டுக்கள் பண்பு மற்றும் காலச்சார பயிற்சி முனைவு அறக்கட்டளை.
( IMCTF) சென்னை ,

5. பூலியூர்கேசிகன் 2010 புறநானூறு மூலமும் உரையும் ,சாரதா பதிப்பகம் – சென்னை,14